★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No. QB/89/5/78

மலர்: 21 மாசி 14 ரபி-அவ் 28 இதழ்: 16
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26-2-79

## தங்கப்பாளம் வைத்திருந்த இலங்கைப் பிரயாணி கைது

### ராமேஸ்வரத்தில் சம்பவம்

(சென்னை

இலங்கையிலிருந்து இராமேஸ்வரம் வந்த கப்பலில் பயணம்செய்த ஒருவர் தங்கப்பாளம், வெளிநாட்டுச்சவரன் கள், கைக்கடிகாரங்கள் மதலிய ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்களை மறைத்துவைத்துக் கடத்த முயன்றதாக இராமேஸ்வரத்தில் கைதுசெய்யப்பட்டார்.

சாகுல் ஹமீது என்னும் பெயரையுடைய இந்த நபர் அகப்பட்டதும் இவருடன் பயணம்செய்ததாகக் கருதப்படும் மேலும் நான்குபேரையும் ராமேஸ்வரம் சுங்கப் பகுதியினர் விசாரணைக்காகத் தடுத்துவைத்துள்ளனர்.

### நைலோன் வலைகள் பிடிபட்டன

ராமநாதபுரத்தில் தேவிப் பட்டணம் என்ற இடத்தில் ஆறுயிரம் ரூபாய் பெறுமதி

[6-ம் பக்கம் பார்க்க]

# 16,000 சீனத்துருப்புகள் பலி!

# பலநகர்கள் சீனவிடம் வீழ்ச்சி!!

## ஐ.நா.வில் சமரசமுயற்சி; சண்டை நீடிக்கிறது

(ஹொங்கொங்)

சீனாவுக்கும் வியட்நாமுக்குமிடையில் நேற்று ஒன்பதாவது தினத்திலும் கடும்யுத்தம் நடைபெற்றது. வியட்நாமுக்குள் மும்முனைகளில் தாக்குதல் கடுமையாக நடைபெற்றதாக வியட்நாம் தெரிவித்தது. இதே சமயம் வியட்நாமில் பலநகரங்களைக் கைப்பற்றியுள்ளதாக சீனா அறிவித்தது.

கடந்த ஒன்பதுநாள் யுத்தத்திலும் 16 ஆயிரம் சீனர்களைக்கொன்று 160 டாங்கிகளை அழித்துவிட்டதாக வியட்நாம் அறிவித்துள்ளது.

### தலைநகருக்கு 85 மைல் தொலைவில்

சீனத்துருப்புக்கள் வியட்நாமுக்குள் முன்னேறிக் கொண்டிருப்பதாகவும் வியட்நாம் தலைநகர் ஹனோய்க்கு எண்பத்தைந்து மைல் தூரத்தில் அவை நிலைகொண்டிருப்பதாகவும் வியட்நாம் துருப்புக்கள் எதிர்த்துத் தாக்கிக் கொண்டிருப்பதாகவும் சீன வசப்பட்டத்திய நகரை மீட்பதற்கு அவை போராடிக் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹனோய்க்குச் செல்லும் நெடுஞ்சாலையையும் ரயில் பாதையையும் சீன விமானங்கள் குண்டுவீசித் தாக்குவதாகவும் சில செய்திகள் தெரிவித்தன.

### அமெரிக்க - பிரெஞ்சு தீர்மானம்

சீன-வியட்நாம் எல்லைத் தகராறு சமாதானமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று பாதுகாப்புச் சபையில் அமெரிக்காவும் பிரான்சும் கொண்டு வந்த தீர்மானத்துக்குப் பிரிட்டனும் ஆதரவு தெரிவித்துள்ளது.

சீனாமேலும் புதிதாகத் தனது துருப்புக்களை வியட்நாம் எல்லைக்கு அனுப்பிக் கொண்டிருப்பதாகவும் இன்னும் சில தினங்களில் சீன-வியட்நாம் யுத்தம் உக்கிரமடையக்கூடுமென்றும் கூறப்படுகிறது. இந்த யுத்தம் மேலும் பயங்கர விளைவுகளு

[6-ம் பக்கம் பார்க்க]

## 15 விமானங்களில் ரஷ்ய ஆயுதங்கள்

(ஹொங்கொங்)

பதினைந்து சோவியத் விமானங்கள் இராணுவ ஆயுதங்களுடன் இன்று வியட்நாம் தலைநகரான ஹனோய் விமானநிலையத்தில் வந்திறங்கின.

ஹனோயிலும் சீனர்களுடன் வியட்நாமியர் யுத்தம்செய்துவரும் போர்முனைகளிலும் சோவியத் ராணுவ வீரர்களும் காணப்படுகின்றனராம்.

வியட்நாமுக்குச் சென்றுவிட்டு ஹொங்கொங் வந்து சேர்ந்துள்ள அமெரிக்க காங்கிரஸ் தூதுக்குழுவினரை ஆதாரம்காட்டி ஹொங்கொங்கிலுள்ள இடதுசாரிப் பத்திரிகையொன்று மேற்கண்ட தகவல்களை வெளியிட்டிருக்கிறது.

### கடும் சண்டை நீடிக்கிறது

சீனத் துருப்புக்களுக்கும் வியட்நாம் துருப்புக்களுக்கு மிடையில் கடும் சண்டை

[5-ம் பக்கம் பார்க்க]

### யாழ். ரயில்நிலையக் கொள்ளை

## 20 பேர் விசாரணை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் சென்ற சனிக்கிழமை பிற்பகல் சுமார் நாலாயிரம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டது சம்பந்தமாக இருபதுக்கு மேற்பட்டோர் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டதாக அறியப்படுகிறது. பொலிசார் புலன்விசாரணை செய்கின்றனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## ரூபா 18 ஆயிரம் பொருள்கள் கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டையிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் பதினெண்ணாயிரம் ரூபா பெறுமதியான நகைகள், பொருள்கள், ரொக்கப்பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

வீட்டுக்காரர் மரணவீடொன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிவந்தபோது வீட்டிலிருந்த நகைகளும் பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டிருந்ததாம். இதுபற்றி வீட்டுச் சொந்தக்காரி திருமதி செல்லம் மகேஸ்வரன் பொலிசில் புகார்செய்துள்ளார்.

பொலிசார் புலன்விசாரணை செய்கின்றனர், இதுவரை எவரும் கைதாகவில்லை.

## கூட்டணியுடன் சேர்ந்து இயங்க இளைஞர் நிபந்தனை!

### சீன ஆக்கிரமிப்புக்கும் பேரவை பொதுச்சபை கண்டனம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைக்கான பணிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடத்துடன் இயங்குவதற்குத் தமிழ்இளைஞர் பேரவை தயாராக இருக்கிறதென்றும் தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் இதுசம்பந்தமாக இளைஞர் பேரவையுடன் உத்தியோக பூர்வமாக தொடர்புகொள்ளும் போது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் நேற்றுக்கூடிய தமிழ் இளைஞர்பேரவையின் பொதுச்சபை தீர்மானித்திருக்கிறது.

29-10-78ல் தமிழ்இளைஞர் பேரவையின் பொதுச்சபைக் கூட்டத்தில் இளைஞர் பேரவை எந்த அரசியல் கட்சியிலும் சேர்ந்துகொள்வதில்லை யென்றும், எந்தத் தேர்தலிலும் கலந்துகொள்வதில்லை யென்றும் தனித்துவமாக [இயங்குவதென்றும் தீர்மானித்த தற்கமையவே தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைமைப் பீடத்துடன் ஒன்றுபட்டு இயங்குவதென்றும் நேற்றுக் கூடிய பொதுச்சபை முடிவு செய்துள்ளதாம்.

வியட்நாம் மீது சீனா ஆக்கிரமிப்புச் செய்துள்ளதை தமிழ்இளைஞர்பேரவையின் பொதுச்சபை கண்டித்திருப்பதுடன் சீன ஆக்கிரமிப்பை கூட்டணி எம்பிக்கள் பாராளுமன்றிலும் வெளியேயும் கண்டிக்காதையு பேரவை

(6-ம் பக்கம் பார்க்க)

## விமானமோதல் தவிர்க்கப்பட்டது!

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் சென்ற புதன்கிழமை இரவு வானத்தில் ஜெர்மன் ஜெட் விமானமொன்றுடன் இலங்கையின் அவ்ரோ விமானம் மோதிக்கொள்ளவிருந்த ஆபத்து விமானியின் சாதுரியத்தால் ஆயிரம் அடி உயரத்தில் தவிர்க்கப்பட்டது.

வடமாகாணத்தில் லொறிகள், வர்த்தக வான் வாங்குபவர்களுக்கு பினான்ஸ் கடன்வசதியளிக்கிறோம்.

வடஇலங்கையின் இறக்குமதியாளர்களுக்கு அடமான கடன் வசதி [Pledge - Loan] வழங்குவோம் நிதிநிறுவனங்களில், ஆகக்கூடிய அதிக வட்டியினை உங்கள் பணத்திற்கு வழங்குகிறோம்.

| வட்டி | வருடம் | காலம் |
|---|---|---|
| 24 விதம் | 2 | காலமுதிர்வில் |
| 20 விதம் | 2 | மாதாந்தம் |
| 18 விதம் | 1 | மாதாந்தம் |

குறைந்த பட்ச வைப்பு 500/- மட்டுமே.

வர்த்தக விசாரணைகள்:

பகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிறுவனம்

தலைமை அலுவலகம், 54, பாங்ஷால் வீதி, கொழும்பு-11.

124, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 418.

## வரி விளம்பரம்

### தேவை

ஸ்ருடியோ வேலையில் அனுபவமுள்ளவர்களும் பழக ஆர்வமுள்ளவர்களும் நேரில் வரவும் தரன் ஸ்ருடியோ, 9; நவீன சந்தை யாழ்ப்பாணம் போன்: 785 8 (1740)

யாழ் நகரின் பிரபல்யம் வாய்ந்த ரவல் சேவீஸ் ஸ்தாபனத்திற்கு ஆங்கில அறிவுடைய பெண் லிகிதர், மனேஜர் தேவை. விண்ணப்ப முகவரி: விளம்பர இல. 1739, C;o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1739

### கல்வி

2 மாத கட்டிட மின்னியல் வகுப்புக்கள் (Building Electrician Course) செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பமாகவுள்ளன. விண்ணப்ப முடிவுத் திகதி 3-3-79. பயிற்சிகள் 5-3-79 இல் ஆரம்பமாகின்றன. I-A-R, 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1737

### தவறிவிட்டதா?

கூழாவடியில் கண்டெடுக்கப்பட்ட பணப்பர்ஸ் என்னிடம் உள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும். கு செல்லையா, கூழாவடி. சங்கக்கடை கிளை: 3, நாலாங் கட்டையடி. 175

## கொடிநாள்

[யாழ்ப்பாணம்]

கைதடி சைவச்சிறுவர் இல்லத்தின் கொடிநாள் அடுத்த மாதம் 10ம் திகதி நடைபெறவிருக்கிறது. தொடர்ந்து மூன்று தினங்கள் எழுச்சி மாநாடும் நடைபெறும். (அ)

### வெற்றுச் சாக்கு
## கேள்வி விளம்பரம்

வலிகிழக்கு வடபகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் (அச்சுவேலி) தரம் பிரிக்கப்பட்ட சுமார் ஐயாயிரம் வெற்றுச் சாக்குக்கள் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் கேள்வி வைப்புப் பணமாக ரூபாய் நூறும், மீளத் தகாதபணமாக ரூபாய் ஐந்தும், மொத்தமாக நூற்றி ஐந்து ரூபாவும் மேற்படி காரியாலயத்தில் 8-3-79 க்கு முன் கட்டி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை 12-3-79-ந் திகதிக்கு பிந்தாமல் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விண்ணப்பிக்கும் போது என்பலப்பின் இடது பக்க மூலையில் வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம் என்று குறிப்பிடல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
வலிகிழக்கு வடபகுதி பலநோக்கக்கூட்டுறவுச்சங்கம்,
அச்சுவேலி.

1752

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க.

## கச்சதீவுக்கு மன்னார் ஆயத்தம்

[மன்னார்]

கச்சதீவுஏற்றுமதிப் பொருட்கள் மன்னார்க்கடைகளை அலங்கரிக்கத் தொடங்கியுள்ளன. இன்னும் இருவாரங்களில் ஆரம்பமாகும் கச்சதீவுத் திருநாளுக்கென இப்போதே பொருட்களைச் சேகரிப்பதில் கச்சதீவு யாத்திரிகர்கள் ஆர்வம்காட்டி வருகின்றனர். எண்ணெய்த் தகரம், பிஸ்கட் பெட்டிகள், டோர்ச் லைட்டுகள், சவர்க்காரவகைகள் ஆகியன மன்னார்க்கடைகளில் பெருவாரியாகக் காணப்படுகின்றன. (அ)

## கமநலச்சேவைப் பகுதியில்வேலை

[உடுப்பிட்டி]

யாழ். மாவட்டத்தில் மூடப்பட்ட ஆட்புலம் பொறியியல் நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியர்கள் யாழ் கமநலச்சேவைத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். கடந்த மாதம் சி. ரி. ஈ ஓ என்று அழைக்கப்படும் ஆட்புலப் பொறியியல் நீர்ப்பாசனத் திணைக்களம் மூடப்பட்டது

இதனைத் தொடர்ந்து யாழ் மாவட்டத்திலுள்ள ரி சி ஈ ஓ பிரதேச அலுவலகங்களில் பணியாற்றிய ஊழியர்கள் கமநலச்சேவைப் பகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளனர் பல ஊழியர்கள் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

இதுவரை காலமும் ரி.சி ஈ. ஓ மேற்கொண்டு வந்த சிறு நீர்ப்பாசன வேலைகளை இனிமேல் கமநலச் சேவைப்பகுதியே மேற்கொள்ளுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்புத் தொழிலாளி முல்லைத்தீவில் மரணம்

[முல்லைத்தீவு]

கூலிவேலை செய்ய மட்டக்களப்பில் இருந்தவந்த தீன் குட்டி என அழைக்கப்படும் யாசின் சீனித்தம்பி மாரடைப்பால் காலமானார். இவரது மரண விசாரணையை முள்ளியவளை திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. கே தியாகராசா நடாத்தினார். இறந்தவர் சாந்தமருது கல்முனையைச் சேர்ந்த முஸ்லிம் சமூகத்தவர் என்றும் கூலிக்காக வயல்வேலை செய்ய முல்லைத்திவுவந்த இடத்தில் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் காலமானார் எனவும் விசாரணையின்போது அறியப்படுகிறது.

முல்லைத்திவு பதில் வைத்திய அதிகாரி திருமதி சந்திராவதி நாகேஸ்வரி சாட்சியமளித்ததை அடுத்துமரணவிசாரணை அதிகாரி இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்தார். பிரேதத்தைப் பொறுப்பேற்க உறவினர் யாரும் இல்லாதபட்சத்தில் முல்லைதிவு முஸ்லிம் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்சபை பிரேதத்தை தங்களது சபையின் பொறுப்பில் அடக்கம் செய்ய கோரியதற்கிணங்க பொலிசாரின் சம்மதத்துடன் மரணவிசாரணை அதிகாரி பிரேதத்தை நம்பிக்கையாளர் சபையிடம் ஒப்படைத்து முல்லைத்திவு முஸ்லிம் மையவாடியில் அடக்கம்செய்யுமாறு உத்தரவிட்டார்.

## டிப்போசென்றபஸ் ஐவரைப் பலி கொண்டது

(கொழும்பு)

டிப்போவுக்குச் சென்ற பஸ் ஒன்று அத்துருகிரிய நாவலமுல்ல பகுதியில் வீதியால் சென்ற ஏழுபேரை மோதி, ஐவரைப் பலி கொண்டது.

இருவர் ஆபத்தான் நிலையில் நாவலமுல்ல ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து சிலர் நாவலமுல்ல பஸ் டிப்போவைத் தாக்க முனைந்தனரென அறியப்படுகிறது

ஸ்தலத்துக்கு விரைந்த பொலிசார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (ம)

## வை. எம். சி. ஏ. வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். வை. எம். சி. ஏ; யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி ஆகியவற்றிற்கு இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ் வை. எம். சி. ஏ. 2 விக்கட்டுகளால் வெற்றிபெற்றது.

யாழ். வை. எம். சி. ஏ. 1ம் இன்னிங்ஸில் 106 ஓட்டங்களையும் 2ம் இன்னிங்ஸில் 8 விக்கட் நஷ்டத்திற்கு 9? ஓட்டங்களையும் யாழ். பரியோவான் கல்லூரி 1ம் இன்னிங்ஸில் 103 ஓட்டங்களையும் 2ம் இன்னிங்ஸில் 89 ஓட்டங்களையும் பெற்றன. [கூ]

## வெற்றி தோல்வி இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். வை. எம். சி. ஏ. க்கும் புனித சம்பத்தரிசியார் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான சிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

சம்பத்தரிசியார் கல்லூரியைச் சேர்ந்த பி. ஏ. ரவிராஜ் 92 ஓட்டங்களும், எம். ஜே. மலைமகன் 71 ஓட்டங்களும் பெற்றனர்.

வை. எம். சி. ஏ. யைச் சேர்ந்த சி. சூரியகுமார் 92 ஓட்டங்கள் பெற்றார்.

## பசுக்களுக்கு மடி அழற்சியா?

(பண்டத்தரிப்பு)

பால் கறக்கும் பசுக்கள் மடி அழற்சி நோயினால் பிடிக்கப்பட்டுள்ளனவா என்பதனைப் பரிசோதனைசெய்து கண்டறியும் வசதிகள் யாழ்ப்பாணம் பண்ணையில் நிறுவப்பட்டுள்ள மிருக வைத்திய ஆய்வுநிலையத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பால் கறக்கும் பசுக்களை வைத்திருப்போர் தங்கள் பசுக்களின் பால்மடிகளைப் பரிசோதனை செய்துகொள்ள விரும்பினால் பண்ணையில் உள்ள ஆய்வு நிலைய மிருக வைத்தியருடன் தொடர்பு கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டது. [அ]

எஸ்.பி. சாமி அன் கொம்பனி

193, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7025

J. L. மொறிசன் சன் அன் ஜோன்ஸ் லிமிட்.
ஸ்தாபனத்தாரின் விவசாய இரசாயனப் பொருட்களுக்கு வடபகுதி ஏக விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
உங்களுக்குத் தேவையான

∴ மொறிசிட் ∴ எலோரால் ∴ 34 டி. பி. ஏ.
∴ றேகோர் ∴ மன்கோசெப் ∴ எம். சி. வி. ஏ.
∴ மொறெக்ஸ் ∴ குப்றுல் ∴ கொம்பிளசால்

ஆகிய விவசாய இரசாயனப் பொருட்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்.

ரஸ்ற் ரவல் சேர்விஸ்
(Trust Travel Service)

குளிரூட்டப்பட்ட சிதம்பரம் கப்பலில்
சிங்கப்பூர் மலேசியா பயணம்
திருகோணமலையிலிருந்து 16-6-79ல் புறப்படுகிறது
கட்டணம் ரூபா 3818 முதல் ரூபா 7700 வரை
[திரும்பி வருவதற்கும் சேர்த்து]
முற்பணமாக 50% செலுத்தினால் ஒரு வாரத்திற்குள் பிரயாணச் சீட்டு வழங்கப்படும்,

விபரங்களுக்கு :
Trust Travel Service
11/A, மொம்ஸாக் கட்டிடம்,
ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது
JEYABALASINGAM & Co.,
"Customs View" — KANKESANTURAI — Telephone : 34.

★ உங்கள் ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் சித்திரை மாதம் 16-ம் திகதி (16-4-79) திங்கட்கிழமை நடைபெறும். அனேக பழைய மாணவர் பெயர் எம்மிடம் இல்லாமையால் தயவு செய்து உங்கள் தற்போதைய விலாசத்தை திரு. சி. துரைராசா, வரணி. என்ற விலாசத்திற்கு விரைவில் அனுப்பிவைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சி. துரைராசா,
கௌரவ செயலாளர்.

1750

யாழ். நகரில் கிளை திறக்கவிருக்கும், கொழும்பில் பிரபலமிக்க ஸ்தாபனமொன்றுக்கு நகர வர்த்தகப் பகுதியில் சுமார் 750 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட காரியாலய வசதி தேவை. நீதிமன்றம், பிரதான வீதி ஆகியவற்றிற்கு அண்மித்த சுற்றுடலில் உள்ள வீடுகள் குத்தகைக்கு அல்லது உடன் விற்பனைக்கு இருப்பின் விரும்பப்படும்.

விபரங்களைக் குறிப்பிட்டு எழுதவும்

C/o. த. பெ. எண். : 945
கொழும்பு.
தரகர்கள் தேவையில்லை

1734

# "சாரணியம் ஒன்றினலேயே இனஐக்கியம் ஏற்படும்"

## பேடன்பவல் விழாவில் உரை

(கொக்குவில்)

சிங்களவர் தமிழையும் தமிழர் சிங்களத்தையும் கட்டாய இரண்டாந்தர மொழியாகப் பாடசாலைகளில் கற்பிப்பதன் மூலம் நாட்டில் இன ஒற்றுமையை உண்டு பண்ண முடியுமென இன்றைய அரசாங்கம் எண்ணுகிறது வேறு சிலர் ஆங்கிலத்தைச் சகலரும் பாசாலைகளில் கற்பதன்மூலம் நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்திவிட முடியுமென எண்ணுகிறார்கள். ஆனல் இவற்றால் குறித்த இலட்சியத்தை அடைய முடியாது, சாரணியம் ஒன்றினலேயே இன ஐக்கியம் ஏற்படும்''

இவ்வாறு சாரணியத் தந்தை பேடன்பவல் பிரபுவின் நினைவுவிழாவில் பேசிய ஓய்வுபெற்ற அதிபரும், சாரணியத்தில் நீண்டகாலச் சன்மானப் பதக்கம் பெற்றவருமான திரு. எஸ் குமாரவேலு பேசுகையில் கூறினர்.

இவ்விழா சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் தலைமையில் நடைபெற்றது.

திரு. குமாரவேலு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

''தமிழர் ஆங்கிலத்தையும் சிங்களத்தையும் கற்பதனாலோ அன்றி சிங்களவர் ஆங்கிலத்தையும் தமிழையும் கற்பதனாலோ நாட்டிலே இனஐக்கியத்தை உண்டாக்க முடியாது. மொழிபேதம் காட்டாது எல்லா இடங்களிலும் சாரணர் குழுக்களை உண்டாக்கி, விளையாட்டு மூலமாகவும், பாசறை அமைப்பதன் மூலமாகவும், முதலுதவி மூலமாகவும், றலி, சாம்பிறீ மூலமாகவும் ஒன்றாக இருந்து சாரண வாக்குப்படி சீவித்து சாரணவிதிப்படி மாணவரை நடாத்தினால் தேசியஒற்றுமை தானாக வரும்.

### கட்டாயபாடமாக்க வேண்டும்

''சாரணப் பாடத்தை ஒரு கட்டாயபாடமாக அரசாங்கம் கொண்டுவருவதன்மூலம் சனசமூகஒற்றுமையை உண்டாக்கமுடியும்

''சாரணியத்தின் மூலம் எம் மத்தியில் மட்டுமின்றி உலக நாடுகளிடையேயும் கூடஒற்றுமையை உண்டாக்க முடியும்.

''சாரணர் மத்தியில் ஏழை பணக்காரன், தாழ்ந்தவன், உயர்ந்தவன் வேற்றுநாட்டவன், உள்நாட்டவன் என்ற பாகுபாடுகள் இல்லை. எல்லோரையும் சமமாக மதித்த எல்லோருக்கும் ஒரேவித சேவை செய்வதே சாரணியத்தின் லட்சியமாகும்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் இவ்வியக்கத்தில் சேர்ந்து படிமுறையாக முன்னேறித் தமது ஊருக்கும் நாட்டிற்கும் உலகிற்கும் சேவைசெய்ய முன்வரவேண்டும்''.

கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் பேசுகையில் கூறியதாவது:

சாரணர் இயக்கத் தந்தை பேடன்பவல் பிரபுவின் விழாவை எமது பாடசாலை கொண்டாடும் இதேவேலை உலகிலுள்ள சகலமக்களும் கொண்டாடுகிறார்கள்.

'மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்த பிரபேடன் வறுமையின் கொடுமையால் பாடசாலைப் படிப்பைத் தொடரமுடியாது இளம்வயதிலேயே ராணுவத்தில் சேர்ந்து படிமுறையாக முன்னேறி இன்று உலகம் போற்றும் உத்தமராக வாழ்ந்துள்ளார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கொண்டுள்ளது. இதற்கான பயிற்சியை ஒவ்வொருவரும் இவ்வியக்கத்தின் மூலம் பெற்று சிறந்த சமூகசேவகர்களாக மாற வேண்டும்.

''எமது முன்னாள் ஆசிரியர் திரு. குமாரவேலு அனுராதபுர சாரணர் இயக்க செயலாளராகவும் குருநாகல் மாவட்ட சாரணர் ஆசிரியராகவும் வாழ்ந்து சிங்கள முஸ்லிம் மக்களின் நன்மதிப்பைப்பெற்று விளங்கியதோடு சிறந்த சாரணர் என்றமுறையில் ராணிப் பதக்கமும் மகாதேசாதிபதியின் நன்மதிப்புப் பத்திரமும் நீண்டகாலச் சன்மானப் பதக்கமும் பெற்று உலகநாடுகள் பலவற்றுக்கு சாரணிய இயக்கத்தின் சார்பில் சென்றவர்'' என்றார்.

சாரணர் ஆசிரியர் திரு. வி. குணரத்தினம் பேசுகையில் குமாரவேலுவின் சேவையைப் பாராட்டிப் பேசினர். (அ)

# "இஸ்லாமியர் பிறருடன் ஒன்றிணைந்து வாழும் பண்பினர்"

## யாழ். பல்கலைக்கழக மீலாத் விழாவில் உபவேந்தர்

[கொக்குவில்]

''இஸ்லாமிய சகோதரத்துவம் வலிமை மிக்கது. முஸ்லிம்கள் சகோதரத்துவ அடிப்படையில் ஒரே மனப்பான்மையுடன் ஒன்றுபட்டு வாழும் இயல்புடையவர்கள் சிறுபான்மையாகவோ பெரும்பான்மையாகவோ அவர்கள் வாழ்ந்தாலும் இந்த ஐக்கியம் முஸ்லிம்களிடம் உலகில் பரவலாகக் காணப்படுகிறது'

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெற்ற மீலாத் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறினர்

இம்மீலாத் விழா நேற்று முன்தினம் மாலை அரபு இஸ்லாமிய நாகரிகத்துறை விரிவுரையாளர் மௌலவி கே எச். எம் காலிதீன் தலைமையில் நடைபெற்றது

பேராசிரியர் வித்தியானந்தன் தமது பேச்சில் மேலும் கூறியதாவது:

' முஸ்லிம்கள் கலை. கலாச்சாரத்துறைகளில் ஏனைய மக்களோடு ஒன்றிணைந்து வாழக்கூடியவர்கள் அவர்களது பரந்துபட்ட நோக்கம் சகோதரத்துவப் பிணைப்பால் இருக்கமானது

' உலகில் வாழுகின்ற மக்களில் காற்பங்கினர் முஸ்லிம்கள். இவ்வாறு பரந்து வாழ்வதற்கு அடிப்படையாக அமைவது நபிகள்நாயகத்தின் போதனையாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில பல சமய மாணவர்களும் ஒன்றுபட்டு இவ்வாறான விழாக்களில் பங்குபற்றுவது மிக்க சிறப்பம்சமாகும்.''

தமிழ்த்துறைப் பேராசிரியர் க. கைலாசபதி உரையாற்றுகையில் ''கிறிஸ்துவுக்குப் பின் 6-ம் நூற்றாண்டு அரேபிய தீபகற்பத்தைப் பொறுத்தவரை முக்கியத்துவம் வாய்ந்ததாகும. இஸ்லாம் மதம் உலகில் பரவுவதற்கு நபிகள்நாயகத்தின் போதனைகளும் பின்பற்றுதலுமேகாரணமாகும்.'' நபிகள் நாயகத்தின் வரலாற்றை உலகம் மறுக்கமுடியாது' என்றார்.

மௌலவி கே. எம். எச். காலித்தீன் பேசுகையில், 'இஸ்லாம் திருக்குர்-ஆன் மூலமாகவும் நபிகள்நாயகத்தின் வாழ்க்கை முறைகளிலிருந்தும் உருவாக்கப்பட்ட மார்க்கமாகும் நபிகள்நாயகம் போதித்தது, வாழ்க்கையில் பின்பற்றியது எல்லாம் வல்ல அல்லாவின் கட்டளைகளே யாகும், அல்லாவின் கட்டளை மனித இனத்தை ஒரே அமைப்பில் காண்கின்றது. ஆதி மனிதர் ஆதம் (அலை[ ஹவ்வா (அலை மூலமாக மனித இனம் பரவியது மனிதன் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் ஒரே இனம் என்ற தத்துவத்தை அல்லா நபிகள் நாயகம் மூலம் போதித்துள்ளார்.

இன, நிற, குல, மொழி பேதங்கள் இஸ்லாத்தில் கிடையாது' என்றார்.

இஸ்லாத்தில், சிறுபான்மை பெரும்பான்மைப் பிரச்னைகள் இல்லையென்றும், சிறுபான்மை மக்களும் பெரும்பான்மை மக்களோடு சமத்துவமாக வாழவேண்டியவர்கள் என்றும், அரேபியத்திப கற்

[4-ம் பக்கம்பார்க்க[

# 'நபிகள் நாயகம் நல்வழியை இளைஞர் பின்பற்றவேண்டும்'

[யாழ்ப்பாணம்]

''நபிகள் நாயகம் (ஸல்) வாழ்ந்து காட்டிய நல்வழியில், இன்றைய இளைஞர்கள் வாழ்க்கை நெறியினைக் கடைப்பிடித்து வந்தால் எதுவித இன்னல்களுமின்றிச் சிறந்த வாழ்க்கையை அமைத்துக்கொள்ள லாம்''

இவ்வாறு யாழ்ப்பாணம் முஸ்லிம்கள் ஓரிவீதியில் நடைபெற்ற மீலாத் விழா கொண்டாட்டங்களின்போது, சட்டத் தரணி ஜனப் இமாம் நசீன் குறிப்பிட்டார். நிழ்ச்சிகளின்போது, ஆரம்ப நிகழ்ச்சியாக, மவ்லூது ஓதப்பட்டு, நபிகள்நாயகத்தின் பேரால் சலவாத்தும் ஓதப்பட்டது

ஜனப் இமாம் நசீன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''எம்பெருமானர் அவர்கள் உண்மையாக இருந்தும் உலகம் போற்றத்தக்கவிதமாக போதனைகளை புகட்டியும் இஸ்லாத்தை சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அறிவுகளை மக்களுக்கு எடுத்துக்கூறியும் ஓர் சிறந்த வழிகாட்டியாகவும், புகழும் கீர்த்தியும் அறவே வெறுத்தவராகவும் ஏழையாகவே வாழ்ந்துவந்தார் இஸ்லாத்தை மக்களுக்குப் போதித்ததுமல்லாமல் எவ்வாறுநடந்து கொள்ளவேண்டும் என்றும் வழிகாட்டினர்'' என்றார்

யாழ் முஸ்லிம் சமுக சேவா சங்கத்தின் செயலாளரான ஜனப் எம் ஈ ஷா ஹூல் பேசுகையில் நமது இறுதி நபியான முஹம்மது [ஸல்] அவர்கள் இளைஞர்கள் எவ்வாறு மார்க்க விதியின் பிரகாரம் வாழ்க்கையை கடைபிடிக்க வேண்டுமென்று போதித்தார்களோ அவ்வண்ணமே இன்று தொடக்கமாவது ஆரம்பித்து புனித இஸ்லாத்தின் அடிப்படையில் வாழ வேண்டுமென்று அங்கு குழுமியிருந்த இளைஞர்களை கேட்டுக் கொண்டார் [கெ-அ]

# மக்கள் கருத்து

## இலங்கைத.ஆ.சங்கயாழ்.கிளை கூட்டத்தைக் கூட்டுக

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 14-10-1978ல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டபோது அக்கூட்டத்தில் நிறைவெண் இல்லாதிருப்பது சுட்டிக்காட்டப்பட்டதால் அக்கூட்டம் பின்போடப்பட்டது. இக்கிளையில் 1977, 78ம் நிதி ஆண்டில் ஆகமொத்தம் 212 உறுப்பினரே உள்ளனர். அன்றுகூட்டத்துக்கு வந்த மொத்த அங்கத்தவர் தொகை 62 ஆகும். நிறைவெண் இல்லாமை காரணமாக அன்றையகூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட சகல விஷயங்களும் செல்லுபடியாகாதென்று சங்க யாப்புக்கூறுகின்றது.

இதன் பின்னர் ஒத்திவைக்கப்பட்ட இக்கூட்டம் 1-11-1978ல் நடைபெறுமென அன்றைய யாழ். கிளைச்செயலாளர் திரு. ஆ. அருமைநாயகத்தினல் அறிவிக்கப்பட்டது அன்றைய கூட்டத்தில் நிறைவெண் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. கூட்டத்தை நடத்த வேண்டிய கிளை நிர்வாகிகளுக்குப் பதிலாக முன்னைய நிறைவெண் இல்லாத (14-10-1978) கூட்டத்தில் தேர்தல் அதிகாரிகளாகக் கடமையாற்றியோர் கூட்டத்தை ஆரம்பித்தனர். யாழ், கிளை நிர்வாகிகளிடம் கேட்டுத்தீர்க்கவேண்டிய பிரச்னைகளை இவர்களிடம் கேட்டுத் தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் சபைக்கு ஏற்பட்டது.

முன்னைய கூட்டம் (14-10-1978) செல்லுபடியாகாதென்றும், செல்லுபடியாகுமென்றும் இரு பிரேரணைகள் தேர்தல் அதிகாரிகளின்வேண்டுதலின் பேரில் சமர்ப்பிக்கப்பட்டன. அதாவது முதலாவது பிரேரணை-தேர்தல் ஆரம்பத்திலிருந்தே நடத்தப்படவேண்டும். இரண்டாவது பிரேரணை 14-10-1978ல் நடைபெற்ற கூட்டத்தில் நடந்து முடிந்தது போக எஞ்சியபதவிகளுக்கான தேர்தல் நடத்தப்படவேண்டுமென்பதாகும்.

இவ்விரண்டு பிரேரணைகளில் இரண்டாவது பிரேரணையைச் சபையில் வாக்கெடுப்புக்கு விட்ட தேர்தலதிகாரியாகக் கடமையாற்றியவரில் ஒருவர் அதற்குச் சாதகமாக மிகக் குறைந்த தொகையினர் கைகளை உயர்த்தியதைப் பார்த்துவிட்டு, அடுத்த பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடாது தட்டிக்கழித்துவிட்டார். இப்பாரபட்சமான செயலால் சபையோர் பல கேள்விகளைக் கேட்டும் திருப்திகரமான பதில் நிர்வாகிகளால் அளிக்கப்படவில்லை. இதன் பின்னர் தேர்தல் அதிகாரிகளாகக் கடமையாற்றியஉறுப்பினர் இருவரும் கூட்டத்தை விட்டு வெளியேறினர் இக்கூட்டத்துக்கு வந்தசங்கஉறுப்பினர்கள் பலர் பக வேதனைப் பட்டனர். இதனல் சங்கத்தின் வளர்ச்சி குன்றுமே தவிரக் கூடாதென்பது வெள்ளிடைமலை அத்துடன் கூட்டம் எந்தவித முடிவுமின்றிக் கலைந்தது இவ்விரு கூட்டங்களுக்கும் சங்கத்தின் பொதுச்செயலாளரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கிளையின இரு கூட்டங்களைப் பற்றிய விபரங்களையும் இச்சங்கத்தின் தலைவர் திரு டி. எஸ். கே வணசிங்காவுக்கு அனுப்பி, கிளைக கூட்டத்தை ஒழுங்காக நடத்தி, புதிய நிர்வாகிகளைத் தெரிந்து சங்கம் ஒழுங்காக இயங்கவும் எமது பிரச்னைகள் தீர்க்கப்படவும் உதவுமாறு 79கிளைஉறுப்பினர்களின் கையொப்பமிடப்பட்ட முறைப்பாடு ஒன்றை 7-12-1978ல் பதிவுத்தபால் மூலம் அனுப்பியிருந்தேன். பிரதிகள் பொதுச்செயலாளருக்கும் நிர்வாகச்செயலாளருக்கும், மாவட்டச்செயலாளருக்கும், கிளைச்செயலாளருக்கும் அனுப்பினேன். மீண்டும் 24-1-1979ல் ஒரு நினைவுறுத்தல் கடிதத்தைத் தலைவருக்கும், பிரதியொன்றைப் பொதுச்செயலாளருக்கும் அனுப்பினேன். இவை எவற்றுக்குமே இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

எமதுகிளை உறுப்பினர்களின் பிரச்னைகள் பல கவனிக்கப்பட வேண்டியிருப்பதாலும் சங்கம் வளர்ச்சியடையவேண்டுமென்பதாலும் உடனடியாக இக்கிளைக்கூட்டம் கூட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மிகத்தயவுடன் சம்பந்தப்பட்டோர் அனைவரையும் சங்கவளர்ச்சியில் அதிக ஆர்வமும் அக்கறையும் உள்ள ஒருவன் என்ற முறையில் கேட்டுக் கொள்கிறேன்.

சு. சிற்றம்பலம்
ஆசிரிய கலாசாலை,
கொழும்புத்துறை.

# சைவசமய அறிவுப்போட்டி முடிவுகள்

(வட்டுக்கோட்டை)

காரைநகர் மணிவாசகர் சபையால் நடத்தப்பெற்ற சைவசமய அறிவுப் போட்டியில் பரிசில்கள் பெறுவோர் விபரம் வருமாறு 1-வது பரிசில் பா. கண்ணன் [புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி) 2-வது பரிசில் இ தியாகேஸ்வரன் [புத்தூர் சோமாஸ்கந்தா] 3-வது பரிசில் இ கண்ணலிங்கம் [வாதரவத்தை புத்தூர்]

ஆறுதல் பரிசுகள் பெறுவோர் பா கண்ணும்மாள் [நல்லூர்] த இராசலிங்கம் [வடடகச்சி] செ கலாநிதி [அச்சுவேலி] சி இராஜசுசி (ஆவரங்கால் ச அருண [புத்தூர் சோமாஸ்கந்த சி சந்திரகுமார் [சிறுப்பிட்டி தெற்கு] க. கௌரி தேவி தோப்பு அச்சுவேலி ந யோகேஸ்வரி [புத்தூர் சோமஸ்கந்தா]

[4-ம் பக்கம் பார்க்க]

# ஓடும் பஸ்ஸில் கொள்ளை! கொள்ளையர் ஒருவர் பலி!!

## இருவரைப் பிரயாணிகள் மடக்கினராம்

(கொழும்பு)
ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் பயங்கர ஆயுதமுனையில் கொள்ளையடித்த கொள்ளையர்கள் அறுவரில் ஒருவர் பிரயாணிகளின் தாக்குதலையடுத்துப் பலியானார். மற்றுமொருவர் ஆபத்தான நிலையில ஆஸ்பத்திரியில் உள்ளார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை அத்துருகிரிய-நாவலமுல்ல பகுதியில் நடைபெற்றது.

ஹோமகமவிலிருந்து நாவலமுல்லவுக்குச் சென்ற பஸ்ஸில் இடையில் துப்பாக்கி, கத்தி சகிதம் ஏறிய ஆறு கொள்ளையர்கள் ஓடும் பஸ்ஸில் வைத்துப் பிரயாணிகளிடமிருந்த பணத்தைக் கொள்ளையடித்த பின்னர் வழியில் இறங்கித் தப்ப முயற்சித்தபோது பிரயாணிகளாலும், கிராமவாசிகளாலும் சுற்றிவளைக்கப்பட்டனர். அடுத்துப் பிரயாணிகளும், அவ்வூர்வாசிகளும் கொள்ளையரைத் தாக்கியபோது கொள்ளையரில் நால்வர் துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டுத் தப்பி மறைந்துவிட்டனராம்.

ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். மற்றவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

சம்பவம் நடைபெற்ற இடத்தில் துப்பாக்கியொன்றும் மீட்கப்பட்டது (ம-இ)

# 'பொலிஸ்மா அதிபர் தலைசிறந்த அதிகாரி'

## பிரதமர் பாராட்டு

(கொழும்பு)
''நல்லூர் மக்கள் வங்கிக்கிளையில் கொள்ளை இடம்பெற்ற தினமான கடந்த டிசம்பர் மாதம் 5ந் திகதி பொலிஸ் மா அதிபர் திரு அனா செனவிரத்ன விசேட விமான மூலம் 6-25க்கு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டு 7-30 மணிக்கு விமான நிலையத்தைச் சென்றடைந்து அங்கிருந்து யாழ் நகரில் தாக்குதல் நடைபெற்ற இடங்களைச் சென்று பார்த்தார். பின்னர் இரவு 8-30 மணிக்கே யாழ் பொலிஸ் நிலையம் சென்றார்.''

இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திரு ரி. பி வெரப்பிட்டியா நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை எம். பி, பண்டிதர் கா. பொ இரத்தினம் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் 5ந் திகதி பொலிஸ் மா அதிபர் திரு அனா செனவிரத்ன எத்தனை மணிக்கு யாழ்ப்பாணம் சென்றார்? எத்தனை மணிக்கு யாழ் பொலிஸ்நிலையம் சென்றார்? யாழ் கடைவீதியில் எந்நேரம் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது? என்ற கேள்விகளையே பண்டிதர் சபையில் கேட்டிருந்தார்

### பிரதமர் கருத்து

இந்நிலையில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா எழுந்து தாம் இவ்விவகாரம் குறித்துப் பேசவிருப்பதாகத் தெரிவித்துவிட்டு உரையாற்றினார்.

அவர் இது பற்றிக் கூறியதாவது;

''பண்டிதரின் இக்கேள்வி சந்தேகத்தை நோக்கமாக வைதது்க் கேட்கப்படுகிறது. இதுபற்றி பண்டிதர் இரத்தினத்திடம் கேட்டபோது, யாழ்ப்பாணத்தில் எழுந்த வதந்தியைத் தெளிவுபடுத்தவே தாம் இது பற்றிக் கேள்வி கேட்டதாக அவர் தெரிவித்தார்.

### தேடுதல்நடத்தியபோதே பதட்டம்

நல்லூரில் கொள்ளை நடைபெற்றதையடுத்து ஏற்பட்ட பதட்டநிலை கொள்ளைச் சந்தேகநபர்களைப் பொலிசார் தேடுதல் நடத்தியபோதே ஏற்பட்டதென்று எமக்கு அறிவிக்கப்பட்டது

அன்றைய தினம் மாலை 5-30 முதல் 6-30 வரை தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதும், ஜனாதிபதி விசேட விமானப்படை விமானம் ஒன்றில் திரு. அனா செனவிரத்ன பிரிகேடியர் ரணசிங்கா, வட பிராந்தியப் பொலிஸ் மா அதிபர் திரு செனவிரத்ன ஆகியோரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தார்.

பொலிஸ் மா அதிபர் திரு. செனவிரத்ன எமக்குக் கிடைத்த சிறந்த அதிகாரியாவார். அவர் மீது சந்தேகம் கொள்வது அர்த்தமற்றதாகும்.

### துரைரத்தினம்தகவல்

இவ்விவகாரம் தொடர்பாகப் பேசிய பருத்தித்துறை

[5-ம் பக்கம் பார்க்க]

## இன்றைய பலன்

மாசிமாதம் 14-ம் திகதி

(26-2-1979)

திங்கட்கிழமை

மேடம்: அவசரக் கோலம் தலைகாட்டும். அதன் வழித் துன்பங்கள் தொடரும் ஆசாரக் குறைவும் உண்டு. அடக்கமே நன்று. அவதானம் வேண்டும்.

இடபம்: தன்மான வாழ்வுடன் தனமுடைமை சேரும். தாயின் ஆதரவும் தவறுமல் கிடைக்கும். முயற்சி செய் முன்னேற்றமுண்டு. வாகன சகமும் உண்டு.

மிதுனம்: மக்களால் மகிழ்ச்சி. மனம்நிறைந்த வாழ்வு புதுமையில் நாட்டம். புதுப் பொலிவும் உண்டு, மாணவர்க்கு முன்னேற்றமான தினம்.

கடகம்: வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம். உடல்நலத்தைப் பேணவும். உத்தியோகத்தினுல் உபத்திரவம் உண்டாகும். உற்சாகம் வேண்டும்.

சிங்கம்: அரும்பிய காதல் இன்று கரும்புபோல் சுவைக்கும் பாரீர். விரும்பிய எண்ணம் போல் நல்லவை நடக்கும் காணீர், குடும்ப சுகமும் குறிக்கோள் வெற்றியும் உண்டாகும்.

கன்னி: நம்பிக்கை மோசடி நடக்கும். நண்பர்களும் காலை வாரிவிடுவர். தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும். அடக்கம் நன்று.

துலாம்: உறவுமுறைகள் பலப்படும். உற்சாகம் பெருகும். புதிய நண்பர்கள்புடை சூழ்வார்கள். வாழ்த்தும் உண்டு. பிதாவழித் தனமும் தாராளமாகக் கிடைக்கும்.

விருச்சிகம்: உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும். உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள். உவகைசேரும். இதற்கு விடா முயற்சி விரும்பத்தக்கது.

தனுசு: விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். எதிர்பார்த்த கடன் கிடைக்கும். சிலருக்கு அரசினர் ஆதரவும் உண்டு. தெய்வ சிந்தனை வேண்டும்.

மகரம்: பலவழிகளிலும் பணம் செலவாகும். நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். நடுநிலைமை நன்று. உடல்நலனும் சிறிது பாதிக்கப்படலாம்.

கும்பம்: குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கி மறையும். மனதில் அமைதி குன்றும் விஷமிகளின் புனைந்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும். அடக்கம் நன்று.

மீனம்: பணமுடை தீரும். பந்துக்களின் தொடர்புகள் பெருகும். குடும்பத்தில், பரவசமான சூழ்நிலை தென்படும் கல்வியில் முன்னேற்றமும் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## நொத்தாரிஸ்



அத்தியடி புதுவீதியைச் சேர்ந்த திரு. சி இராசநாயகம் பிரசித்த நொத்தாரிஸ் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். காலஞ்சென்ற பிரபல வழக்கறிஞர் ஆ. தவபாலசிங்கத்தின் காரியாலயத்தில் இருபது வருடங்களுக்கு மேல் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய இவர் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரும் கந்தர்மடம் அன்னதிதம்பி தம்பதியின் புதல்வருமாவார். அரசியலிலும் பொதுநலச்சேவையிலும் அதிக ஈடுபாடுடைய திரு. இராசநாயகம் ஒரு நல்ல எழுத்தாளரும் கூட.

## ஐ. நா. பாதுகாப்புச் சபை

### இரண்டரை மணி நேரம் விவாதித்தது

நியூயோர்க், பெப். 25
சீன-வியட்நாம் யுத்தம் குறித்து ஐக்கியநாடுகள்சபையின் பாதுகாப்புச்சபை இன்று கூடி சுமார் இரண்டரை மணித்தியாலம்வரை விவாதித்தது.

அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே, போர்த்துக்கல் ஆகிய நாடுகளின் கோரிக்கையை அடுத்தே பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டம் நடைபெற்றது.

## சைவசமய...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

இ. தமிழ்ச்செல்வன் [புத்தூர் சோமாஸ்கந்தா] சி. சுசிலாதேவி [சிறுப்பிட்டி தெற்கு] சி. [இராஜஇராஜேஸ்வரி புத்தூர் சோமாஸ்கந்தா சி. இராஜகாந்தி [புத்தூர்] சோமாஸ்கந்தா.

## இஸ்லாமியர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தில் வாழ்ந்த யூத, கிறிஸ்தவ மக்களுக்கு சமத்துவம் அளித்ததன் மூலம் இதனை முகம்மது [ஸல்] நடைமுறைப் படுத்திக் காட்டினார் என்றும் மௌலவிகாலித்தீன் கூறினார்,

தமிழ்த்துறை விரிவுரையாளர் எம். ஏ. நுஃமான், திரு கே. நடராசமூர்த்தி, திரு ஜெயபாலன், செல்வி பாக்கியா ஜலீத், சு இராசலட்சுமி, எம். எம். சியான் உட்படப் பலர் உரையாற்றினர்.

ஜனாப் எம். எஸ். எம். அஸ்வா நன்றி தெரிவித்துப் பேசினார்

இரசாயனகூட தொழில்நுட்ப உதவியாளரான செல்வி ஜோய்ஸின் அகால மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக மீலாத் விழாவில் இடம்பெவிருந்த படக்காட்சி நிறுத்தப்பட்டது. [அ]




**வெலிங்டன்**... 



# "பொழுது போக்கிற்காக மட்டும் நாடகம் பார்க்கக்கூடாது"

## -- கலாநிதி அ. சண்முகதாஸ்

(கொக்குவில்)

' சாதாரண மக்கள் தமது ஓய்வு நேரத்தை சமூகத்திற்குப் பயன் படும்வழியில்கழித்தல்வேண்டும். நாம் வீணே பொழுதைக் கழிப்பதானல் பூங்காவுக்கோ அன்றி கடற்கரைக்கோசெல்லலாம்'' என்று நேற்றுமுன்தினம்சகாயர் நாடகாலயாவின் 'மாப்பிள்ளை தேவை' 'சோக்ரடீஸ்' ஆகிய இரு நாடகங்கள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டபோதுவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் கூறினார்.

கலையரசு சொர்ணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. சண்முகதாஸ் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''நாடகங்கள் மக்கள் பொழுதைக் கழிக்கும் ஒரு நிகழ்ச்சியாக அமையக் கூடாது. அது பாமரமக்களை நல்ல நிலைக்கு உயர்த்தக் கூடியதாக அமையவேண்டும். அதை விடுத்து உயர்மட்டத்தில் வாழ்கின்றவர்களின் பொழுது போக்கிற்காக அது அமையக்கூடாது. அதே நேரத்தில் மக்கள் எல்லோரும் ரசிக்கக்கூடியதாகவும் நாடகங்கள் அமைய வேண்டும்.

''இசையும் தாளமும் எமது பண்டைய சொத்து. இந் நாடகங்களை நெறிப்படுத்திய இயக்குநர் மாமணி நற்குணசேகரம் எமது மரபுமுறை தவருது இசையையும் தாளத்தையும் பயன்படுத்தி 'மாப்பிள்ளை தேவை' என்ற புதுமையான நாடகத்தை மேடையேற்றி வெற்றி கண்டுள்ளார். இவரது வெற்றிக்கு உறுதுணையாக இருந்துள்ளார் திரு. அருமைநாயகம்.

''பிற்பாட்டுப் பாடுபவரின் திறமையில்தான் நாடகங்களினதும் நாட்டுக் கூத்துக்களினதும் முழுமைதங்கியுள்ளது. ஒரு நடிகன் தான்பாடும் பாட்டை பாடமுடியாத இடத்து அவன் விட்ட இடத்திலிருந்து லயமும் தவருது பிற்பாட்டுப்பாஞல் தான் அந் நாடகமோ நாட்டுக் கூத்தோ வெற்றியடைய முடியும்- அதற்கு ஏற்றவாறு பிற்பாட்டு பாடத்தவறினல் அந்நிகழ்ச்சி எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும் அது சோபை இழந்துவிடும்.

''இந்நாடகத்திற்குபிற்பாட்டுப்பாடிய கமலலோகினி பரமேஸ்வரனின் திறமையைப் பாராட்டாது இருக்க முடியாது. இசையும் நடனமும் கொண்ட இந்நாடகத்திற்கு அவரின் பின்னணிப்பாட்டு மேலும் மெருகூட்டியது.''

வித்துவான் க.ந வேலனும் பேசினர். [அ]

## வெற்றிலை உற்பத்தி

### எம். பி. நடவடிக்கை

(புலோலி)

பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியின் கிழக்குப் பகுதியான வெற்றிலைக் கேணியில் வெற்றிலைக் கொடிகள் நாட்டப்படவுள்ளன.

இப்பகுதியில் வெற்றிலைக் கொடிகள் நன்கு செழித்து வளரக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதனுல், இங்கு வெற்றிலைக்கொடிகளை நாட்டுவதற்குரிய நடவடிக்கைகளைப் பருத்தித்துறை எம். பி. மேற்கொண்டுள்ளார். [அ]

## இடமாற்றம்

[சாவகச்சேரி]

தவசிகுளம் ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபர் திரு. எஸ் இராஜரட்ணம் எழுதுமட்டுவாள் சி. சி. தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். [அ]

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் 706 வது சீட்டிழுப்பு நேற்று முன்தினம்மாலை கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் இழுக்கப்பட்ட போது முடிவுகள் வருமாறு:-

முதலாம் பரிசு
**32 V 0227**
ரூபா 1, 00, 000.

இரண்டாம் பரிசு
**20 J 0445**
ரூபா 40, 000.

மூன்றாம் பரிசு
**18 J 0322**
ரூபா 10, 000

ரூபா 1632 சதம் 09 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் பின் வருமாறு:

| | |
|---|---|
| 05 A 0820 | 18 A 0866 |
| 15 A 0775 | 23 A 0163 |
| 13 B 0854 | 26 B 0245 |
| 28 B 0654 | 02 C 0616 |
| 07 C 0392 | 10 C 0331 |
| 14 C 0255 | 14 C 0378 |
| 06 D 0099 | 13 D 0898 |
| 19 D 0050 | 06 E 0079 |
| 18 E 0432 | 33 E 0365 |
| 01 F 0507 | 09 G 0015 |
| 11 G 0019 | 32 G 0334 |
| 15 H 0337 | 18 H 0285 |
| 19 H 0160 | 22 J 0134 |
| 25 J 0623 | 10 K 0676 |
| 20 K 0286 | 22 K 0176 |
| 31 K 0749 | 32 K 0204 |
| 32 K 0454 | 08 L 0513 |
| 18 L 0501 | 19 L 0775 |
| 04 M 0142 | 19 M 0100 |
| 32 M 0535 | 01 N 0528 |
| 15 N 0365 | 09 N 0032 |
| 15 N 0737 | 21 N 0610 |
| 11 O 0541 | 01 P 0250 |
| 62 P 0627 | 10 P 0538 |
| 11 P 0245 | 26 P 0504 |
| 27 P 0382 | |
| 28 P 0862 | 30 P 0524 |
| 07 Q 0007 | 15 Q 0135 |
| 16 Q 0615 | 17 Q 0713 |
| 19 Q 0088 | 28 Q 0381 |
| 06 R 0346 | 06 R 0828 |
| 07 R 0250 | 09 R 0159 |
| 17 R 0128 | 27 R 0337 |
| 28 R 0755 | 28 R 0891 |
| 01 S 0302 | 05 S 0454 |
| 12 S 0506 | 14 S 0714 |
| 21 S 0674 | 06 T 0498 |
| 30 T 0980 | 06 U 0392 |
| 06 U 0598 | 24 U 0470 |
| 32 U 0374 | 04 V 0777 |
| 13 V 0681 | 15 V 0099 |
| 16 W 0077 | 20 W 0253 |
| 25 W 0579 | 27 W 0552 |
| 33 W 0975 | 04 X 0310 |
| 05 X 0388 | 32 X 0 56 |
| 02 Y 0887 | 03 Y 0191 |
| 10 Y 0501 | 17 Y 0074 |
| 18 Y 0199 | 27 Y 0323 |
| 28 Y 0710 | 23 Z 0776 |
| 27 Z 0058 | 28 Z 0461 |

[இவையாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்.]

## பொலிஸ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். பி. திரு. க. துரைரத்தினம் கூறியதாவது:

ஒருதடவை யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பொலிஸ் விடுதியை உடைத்து அங்குள்ள தமிழ்ப் பொலிஸாரைத் தாக்கச் சில பொலிஸார் முயன்றனரென்றும் தாமே அதில் தலையிட்டு நிலைமையைச் சமாளித்ததாகவும், பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் என்னிடம் தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட பிரதமர் யார் அந்த உயர் அதிகாரி என்றும் இந்தச் சபையில் ஒன்றையும் ஒளிக்கத் தேவையில்லை என்றும் கேட்டார். சபையில் அந்த அதிகாரியின் பெயரைத் தாம் குறிப்பிட விரும்பவில்லை என்றும் பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை நியமித்தால் அக் குழுமுன் தான் அவரின் பெயரை வெளியிடுவதாகவும் கூறினர். (ம-இ)

## பிரிட்டிஷ் பாராளுமன்ற செயலாளர் ஒருவர் இலங்கை வருகிருர்

(கொழும்பு)

பிரிட்டிஷ் வெளிநாட்டு, காமன்வெல்த் விவகாரப் பணியகத்தின் ராஜாங்க வெளியுறவுப் பாராளுமன்றச் செயலாளரும், ஒக்ஸ்போர்ட் தொகுதிப்பாராளுமன்ற உறுப்பினருமான திரு. எவான் லுவார்ட் இன்று திங்கட்கிழமை இலங்கை வருகிருர்.

காமன்வெல்த் பணிமனையின் வெளிநாட்டுப் பிரிவில் தெற்கு ஆசிய விவகாரங்களில் விசேஷ பொறுப்புகளை வகிப்பவரான திரு. எவான் லுவார்ட், பங்களாதேஷில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இப்பொழுது இலங்கை வருகிருர். இலங்கைக்குப் பிரிட்டனுக்குமிடையியான அக்கறையுள்ள பொது விஷயங்கள் தொடர்பாக அவர் இங்கு ஆலோசனைகள் நடத்துவார்.

## 15 விமானங்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வியட்நாம் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டபோது அது ஒரு பதில் தாக்குதலேயென்றும் இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையேயன்றி அது விஸ்தரிக்கப்படமாட்டாதென்றும் சீன கூறியிருந்தபோதிலும் இன்னும் சண்டை ஓயவில்லை. யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை.

### இந்தியா வேண்டுகோள்

வியட்நாமிலிருந்துசீனுதனது படைகளை உடன் திருப்பி அழைக்கவேண்டுமென்று இன்று ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்தியா கேட்டுக்கொண்டது. இந்தோசீன நிலைமை பற்றிப் பரிசீலனை செய்வதற்காகப் பாதுகாப்புச்சபையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டுவதில் ஏற்பட்ட காலதாமதத்துக்கு ஐ. நா. விலுள்ள இந்தியாவின் நிரந்தரப்பிரதிநிதி திரு. ஜெய்பால் குறைகூறினார்.

வியட்நாமிலிருந்து சீனு தனது துருப்புக்களை உடனடியாகத் திருப்பி அழைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்த இந்தியப் பிரதிநிதி ''தண்டனை ரீதியிலான போர் நடவடிக்கையை நாம் ஆதரிக்கமுடியாது'' என்ருர்.

வியட்நாமிலிருந்து சீனுதனது படைகளைத் திருப்பி அழைத்துக்கொள்ளவேண்டுமென்றும் கம்போடியாவிலிருந்து வியட்நாம் தனது துருப்புக்களைத் திருப்பி அழைக்கவேண்டுமென்றும் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் அவுஸ்திரேலியாவும் மற்றும் சில நாடுகளும் வலியுறுத்தின. கம்போடியாவிலிருந்து வியட்னும் தனது துருப்புக்களை உடன்விலக்கிக்கொள்ளவேண்டுமென்றும் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் சீனுவும் ஒரு பிரேரணை கொண்டுவந்தது. கம்போடியாவின் நிலைபற்றி ஆராய பொல்பொட்டின் பிரதிநிதி கூட்டத்துக்கு அழைக்கப்பட்டபோது அதை ஆட்சேபித்து சோவியத் பிரதிநிதி வெளியேறினர்.

இந்தோ - சீன நிலைமை பற்றி ஆராய்வதற்காக பாதுகாப்புச்சபை இன்றிரவு மீண்டும் கூடுகிறது.

### சமரச முயற்சியில் இலங்கை?

சீன-வியட்நாம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை நிலைநாட்டும் நடுநிலைநாடுகளின் முயற்சிக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஏ. ஸி எஸ். ஹமீத் தலைமைதாங்கலாமென்று ராஜிய வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது. சீன-வியட்நாம் யுத்தநிறுத்த முயற்சியில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஹமீத் தலையிடலாம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. வாஜ்பாய் கருத்து வெளியிட்டிருந்தார்.


**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர் —பத்மினி
**விக்கிரமாதித்தன்**

**நாகம்ஸ்** (சுன்னகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
**திருடாதே**

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
**The Four Keys**
(Murder-Suspense-Thrill)

கடைசி வாரம்
**ராஜா** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
**பயணம்**
மகாசிவராத்திரியை முன்னிட்டு இன்றிரவு 12-30-க்கு விசேட நள்ளிரவுக்காட்சியுண்டு.

**மனோகரா** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
**ராஜபார்ட் ரங்கதுரை**
(ஈஸ்ட்மன் கலர்) [புதிய பிரதி]

கடைசி 4 தினங்கள்
**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
**உயர்ந்தவர்கள்**

10-வது வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராணி** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் கடைசி 4 தினங்கள்
ஸ்ரீகாந்த் - லக்ஷ்மி
நடித்த
ஜெயகாந்தனின்
**ஒரு நடிகை நாடகம் பார்க்கிருள்**
டைரக்ஷன் : A. பீம்சிங்

**REGAL** NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p. m
**HEADLESS HORSEMAN**
(color)
தலையில்லாக் குதிரைக்காரனின் சாகசங்கள் நிறைந்த படம்
Next Attraction
ON FRIDAY AT ELEVEN

**சாந்தி** (யாழ்நகர்) 3-வது வெற்றிவாரம்!
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
இன்னும் சில தினங்கள் மட்டும் போன்: 7642
Last Few Days
**SEVEN NIGHTS IN JAPAN**
More Suitable for Adults — Eastman Color

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி; 2-00, 6-00&9-30
சனி, ஞாயிறு: 10-00, 2-00 6-00 & 9-30
எம். ஜி ஆர். — பத்மினி
**மதுரைவீரன்** (புதிய பிரதி)

**லிடோ** (யாழ். நகர்) போன்: 7633 தினசரி 4காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
**ஆசை அறுபதுநாள்**

### பெரும்போக நெல் அறுவடை:

# யாழ்மாவட்டத்தில் $24\frac{1}{2}$ லட்சம் புசல்!

[உடுப்பிட்டி]

கடந்தவருடம் யாழ்.மாவட்டத்தில் பெரும்போகத்தில் 2,402,169 புசல் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் 80.477 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளதென்றும், 1977ம் ஆண்டைவிட கடந்தவருடத்தில் நெல் உற்பத்தி அமோக வெற்றியை அளித்துள்ளதென்றும் அவர் யாழ் மாவட்ட விவசாய செயற்படு திட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் வங்கி கடந்த வருடம் நெல்உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு 9,592,918 ரூபாவையும், இலங்கை வங்கி 8,599,959 ரூபாவையும் விவசாயக் கடனாக வழங்கியுள்ளனவென்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

## வேலைவாய்ப்புத் தேடித்தரும் சில நிறுவனங்கள்

### மோசடியில் ஈடுபட்டுள்ளனவாம்

[கொழும்பு]

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகப் பதிவுசெய்துள்ள பல்வேறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்நிலையங்கள் மோசடி நடவடிக்கைகளிகல் ஈடுபட்டுள்ளதாகப் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற எட்டு நிறுவனங்களின் நடவடிக்கைகளை விசேட குழு விசாரணைசெய்துவருகிறதென்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புத் தேடித்தருவதாக மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முகவர் நிறுவனங்களின் லைசென்ஸ்களை ரத்துச்செய்ய வேண்டுமென்றும் பொலிசார் அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்கென சில நிறுவனங்கள் அனுப்பியவர்கள் அந்நாடுகளில் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் பொலிசாருக்குத் புகார்செய்யப்பட்டுள்ளதாம்.

## வெற்றி தோல்வி இல்லை

[கொழும்பு]

இலங்கைக்கும் மேற்கிந்தியாவுக்குமிடையே கொழும்பில் நடைபெற்ற 2வது உத்தியோகப்பற்றற்ற டெஸ்டும் வெற்றிதோல்வி இன்றி முடிவுற்றது.

முதல் இன்னிங்ஸில் இலங்கைக்கோஷ்டி 266 ஓட்டங்களையும் 2வது இன்னிங்ஸில் 5 விக்கட்டுகளை இழந்து 132 ஓட்டங்களையும் பெற்றது

மேற்கிந்திய கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 8 விக்கட்டுகளை இழந்து 402 ஓட்டங்களைப் பெற்றது. [இ]

## 18 வயது யுவதி மரணம்: கர்ப்பச்சிதைவு காரணம்

(மட்டக்களப்பு)

சட்ட விரோதமாக இரகசியமான முறையில் கருச்சிதைவுக்குள்ளாக்கப்பட்ட 18 வயதுக் கன்னிப்பெண் ஒருவர் இரத்தப் போக்கும் வலிப்பும் ஏற்பட்டு மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் மரணமானார்.

மேற்படி கருச்சிதைவு முயற்சிக்குள்ளாக்கப்பட்டவர் வாழைச்சேனை தமிழ்க் குறிச்சியைச் சேர்ந்த யுவதியானார்.

வயிற்று வீக்கம் எனக்கூறி அவரது தாய் வாழைச்சேனை அரசினர் ஆஸ்பத்திரிக்கு அவரைக் கூட்டிச்சென்று காட்டியதாகவும் அவரைப் பரிசோதித்த டாக்டர் மேற்படி கன்னிப்பெண் ஏழுமாதக் கர்ப்பிணி என்றும் கர்ப்பிணிகள் சிகிச்சைப் பிரிவுக்கு வரும்படியும் அவரது தாயாரிடம் கூறி அனுப்பினாராம். தனது மகள் கர்ப்பமுற்றிருப்பதை அவரின் தாய் முற்றாக மறுத்து விட்டாராம்.

இம்மரணம் தொடர்பாக மட்டக்களப்பு நகர மரண விசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் விசாரணை நடாத்தினார். வைத்திய பரிசோதனை நடாத்திய சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. ஸ்ரீ பஞ்சலிங்கம் சாட்சியமளித்தார்.

"இறந்த பெண்ணின் கருப்பையில் ஆண் குழந்தை இருந்தது. கருவைச் சிதைப்பதற்கு முயற்சி செய்யப்பட்டதால் கருப்பையில் கால் அங்குல ஆழமான காயமேற்பட்டுள்ளது. இதனால் ஏற்பு வலியும் இரத்தப் போக்கும் ஏற்பட்டது. கருச்சிதைவு முயற்சியே இவரது மரணத்துக்குக் காரணமாகும் என்று டாக்டர் சாட்சியத்தில் சொன்னார்.

சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்ட மரண விசாரணை அதிகாரி திரு. சிவநாதன் இது தொடர்பான தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 26-ம் திகதி வரைக்கும் ஒத்தி வைத்ததுடன், மேலும் சாட்சியங்களை ஆஜர் செய்யும்படி பொலிசாரை பணித்துள்ளார். (அ)

## தங்கப்பாளம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யான நைலோன் வலைகள் ஒரு படகிலிருந்து கைப்பற்றப்பட்டன இதுசம்பந்தமாக மூவர் விசாரணைக்காகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## ஆசிரியர்கள் அப்பீல் மனுக்கள்

(கொக்குவில்)

பாடசாலைப் பகிஷ்கரிப்பின் போது பாடசாலைக்குச் செல்லாது நின்ற ஆசிரியர்களின் அப்பீல் மனுக்கள் யாவும் யாழ். கல்வித் திணைக்களத்திலிருந்து கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டு கல்வித் திணைக்களச் செயலாளர் திரு. டி. எம். பி. பி தசநாயக்காவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு தசநாயக்கா இது சம்பந்தமான சகல விடயங்கள் பற்றி வடமாநில கல்விப் பகுதி உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கையில் தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்கள் யாவற்றையும் தானே பார்வையிடுவதாகவும், பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு விரைவில் நல்ல தீர்ப்பு வழங்குவதாகவும் தெரிவித்துள்ளாராம்;

## ஆளை மோதிவிட்டு கார் ஓடி மறைந்ததாம்

[நெல்லியடி]

மலேரியா தடுப்பு இயக்கத்தில் கடமைபுரியும் ஊழியரொருவர் தனது கடமையின் பின்பு வீடு திரும்புகையில் வீதியால் சென்றுகொண்டிருந்த கார் ஒன்றினால் மோதப்பட்டார். இவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த ச. பாலகிருஷ்ணன் என்பவரே விபத்திற்குள்ளாகியவராவர். புலோலி உபய கதிர்காமக் கோயிலடியில் வைத்து இவரை மோதிய கார் ஓடிமறைந்து விட்டதாம். பருத்தித்துறைப் பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளார்கள். [அ]

## இன்று திறப்பு விழா

[சரவணை]

சரவணை மேற்கு, கொட்டாங்காடு வட்டாரத்தில் வைரவ ஆலயத்திற்கு அண்மையில் பாலர் பாடசாலை ஒன்று திறக்கப்பட ஏற்பாடாகியுள்ளது.

சர்வோதய இயக்க குழந்தைகள் நாளாந்த கவனிப்பு இயக்க அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு பாலர் பாடசாலையை இன்று திங்கட்கிழமை திறந்துவைப்பார்.

## மேற்கிந்தியா வெற்றி

[கொழும்பு]

மேற்கிந்தியக் கோஷ்டிக்கும் இலங்கைக் கோஷ்டிக்குமிடையில் நேற்று கொழும்பில் நடந்த '45 ஓவர்' கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியக் கோஷ்டி 6 விக்கெட்டுகளால் இலங்கைக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

## கூட்டணியுடன்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாராட்டியுள்ளது.

வவனியா மாவட்டத்துடன் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை இணைத்து வவனியாப் பிரதேசத்தை சிங்களமயமாக்கும் அரசின் திட்டத்தை கண்டிப்பதுடன் இச்செயலை உலக அரங்கில் அம்பலப்படுத்தப்படவேண்டுமெனவும், இதுதொடர்பாக தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளை தமிழ்இளைஞர்பேரவை ஆதரிப்பதுடன் இந் நடவடிக்கைகளுக்கு சகல ஒத்துழைப்பும் வழங்கும் என்றும் பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

இளைஞர்பேரவைப் பணிமனையில் திரு. சந்ததியார் தலைமையில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்திற்கு கிழக்குமாகாணம், கொழும்பு, வவனியா மற்றும் பல இடங்களிலிருந்தும் உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர். கூட்டம் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 4 மணி வரை நடைபெற்றது.

### கச்சதீவு யாத்திரை:

## கொழும்பிலிருந்து முப்பது உத்தியோகத்தர் வருவர்

[யாழ்ப்பாணம்]

அடுத்த மாதம் 8ம் தேதி ஆரம்பமாகவிருக்கும் கச்சதீவு புனித அந்தோனியார் உற்சவத்தையொட்டிய ஏற்பாடுகளின்படி சுங்கப்பகுதியைச் சேர்ந்த 16 உத்தியோகத்தர்கள் கொழும்பிலிருந்து வரவிருக்கின்றனர். மற்றும் இலாகாவைச் சேர்ந்தவர்களுமாக மொத்தம் 30 உத்தியோகத்தர்கள் இங்கு வரவிருக்கின்றனர்.

கச்சதீவுக்கு யாத்திரிகர்களை ஏற்றிச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள ஐந்து துறைகளிலும் கடமையாற்றுவதற்கு சுங்கப்பரிசோதகர்களாக துறைக்கு இருவர் வீதம் 16 பெண்கள் இங்கு தெரிவுசெய்யப்பட்டவிருக்கின்றனர்.

பொலிஸ், சுங்கப்பகுதி, சுகாதாரப்பகுதி ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்கள் அடுத்தமாதம் 7ம் தேதி காலை இங்கிருந்து கச்சதீவுக்குப் புறப்பட்டுச் செல்லவிருக்கின்றனர்.

## ஆசிரியரின் மரணத்துக்கு நஷ்டஈடு கோர ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

வடக்கில் நடந்த மாணவர் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து கல்வி இலாகாவால் ஆசிரியர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட வேலைநீக்க அறிவித்தல்பெற்ற சித்தன்கேணியைச் சேர்ந்த ஆசிரியர் திரு. குமாரசாமி திடீர்மரணமடைந்தது சம்பந்தமாக கல்வி இலாகாவின் மீதும் அரசினர்மீதும் நஷ்டஈடுகோரி வழக்குத் தாக்கல் செய்வது சம்பந்தமாக அவரது குடும்பத்தினர் சட்ட ஆலோசனை செய்துவருவதாக அறியப்படுகிறது.

சுகயீனம் காரணமாக முன்னரே லீவு எடுத்திருந்த திரு. குமாரசாமிக்கு வேலைநீக்க நோட்டீஸ் வழங்கப்பட்டதால் அந்த அதிர்ச்சி காரணமாகவே அவருக்கு மரணம் சம்பவித்ததென்று நஷ்டஈடு கோருவதற்கான காரணம் கூறப்பட்டுகிறதென்றும தெரியவருகிறது.

## மரண தண்டனைக்கும் தமக்கும் சம்பந்தமில்லையாம்

### ஈரான் பிரதமர் பஸாக்கான் கூறுகிறார்

தெஹ்ரான், பெப், 25

ஈரானில் மன்னர் ஷாவின் ஆட்சியில் உயர் ராணுவ அதிகாரிகளாக இருந்த சிலருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பதற்கும் தமக்கும் எந்தவித சம்பந்தமுமில்லையென்று மதத் தலைவர் ஆயத்துல்லா கொமெய்னியால் ஈரானின் இன்றைய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் பஸார்கான் நேற்றுத் தெரிவித்தார்.

முன்னாள் ராணுவ உயர் அதிகாரிகளுக்கு மரணதண்டனை விதிக்கவோ நிறைவேற்றவோ தான் எதிலும் சம்பந்தப்படவில்லையென்று டாக்டர் பஸார்கான் தெரிவித்தார்.

ஈரானில் புரட்சி இஸ்லாமிய நீதிமன்றம் முன்னாள் ராணுவ உயர் அதிகாரிகள் ஒன்பது பேருக்கு இதவரை மரணதண்டனை நிறைவேற்றியிருக்கிறது.

## 16 ஆயிரம்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

க்கு வழிவருக்காமலிருக்கப் பிராத்திக்குமாறு பாப்பரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார். சீன-வியட்நாம் யுத்தத்தை சமாதானப் பேச்சின் மூலம் நிறுத்துவதற்கு சர்வதேச அபிப்பிராயத்தை ஒன்று திரட்ட வேண்டுமென்றும் சீனப்படைகளை வாபஸ்பெறச் செய்வதற்கு ராஜீரிய ரீதியில் வற்புறுத்த வேண்டுமென்றும் இந்தியத் துணைப் பிரதமர் திரு. ஜெகஜீவன்ராம் தெரிவித்தார். இந்தோ சீனத் தகராறில் அமெரிக்கா இராணுவ ரீதியில் சம்பந்தப்பட்டுக் கொள்ள மாட்டாது என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சீனாவின் ஆக்கிரமிப்பை அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் கண்டிக்காததற்கு சோவியத் 'பிராவ்டா' கண்டனம் தெரிவித்துள்ளது.

## பூட்டோ அப்பீல் விசாரணை

[ராவல்பிண்டி]

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோவுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனைக்கு எதிரான அப்பீல் மனுமீது சுப்ரீம் கோர்ட்டில் ஆரம்பமான விசாரணையில் பூட்டோவின் சட்டத்தரணிகள் தங்கள் வாதத்தை தொடர்ந்து நிகழ்த்தினர். நீதியரசர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டது விசாரணை சில தினங்கள் நீடிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நகர மத்தியில் துர்நாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில் சினிமாப்பட மாளிகைக்கு முன்பாக உள்ள கால்வாய் அடைபட்டு அழுக்கு நீர் நிரம்பி வழிந்து துர்நாற்றம் வீசுவதாகவும் இதுபற்றிப் பலதடவை மாநகரசபைக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும் சுகாதாரத்துக்குத் தீங்கான இவ்விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கன்னாதிட்டி வாசிகள் சிலர் ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice The Eelanaadu P B No: 49, Telegrami E. anaadu, Telephone: 389, Registered as a News Paper In Sri Lanka.-